தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 மீனம் (10-4-1987) 85 காசுகள் (இதழ் எண்: 84)

3000 தமிழர் இலங்கைச் சிறையில் வாடுகின்றனர்! கேட்க ஆளில்லை!

18 மாதங்களாய்க் கொடுமைத் துன்பம் தாளாமல் பட்டினி கிடந்து சாகத் துடிக்கும் அவர்களை விடுவிக்க, உலகத் தமிழர்களே, செயவர்த்தனேவுக்கு வேண்டுகோள் மடல் விடுங்கள்!

இலங்கைத் தமிழர்கள் 3000 பேர் இலங்கை வெளிக் கடைச் சிறையில் வன்முறைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 18 மாதங்களாக உடல் வருந்த உயிர் துடிக்கக் கொடுமைப் படுத்தப் பெற்று வருகின்றனர். இறுதியில் அவர்கள் உண்ணு நோன்பு மேற்கொண்டு விடுதலைக்கு ஏங்குகின்றனர். உயிருடன் செத்துக் கொண்டிருக்கும் அவர்களை உடனே விடுவிக்குமாறு தொலைவரி வழியாகவும் இரக்க வேண்டுகோள் மடல்கள் வழியாகவும் இலங்கைத் தலைவர் செயவர்த்தனுவை இங்குள்ள தமிழர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ள வேண்டுகிறோம்.

பேரளவில் இளைஞர்களாகவே உள்ள அந்த அரசியல் சிறையாளிகள் எந்த உசாவலும் வழக்குமன்ற நடவடிக்கையும் இல்லாமல் நீண்டகாலம் சிறையிலிருப்பதால், மனம் நொந்து, தங்களைச் சட்டப்படி வழக்குமன்ற உசாவலுக்குக் கொண்டு வரவேண்டும், இல்லெனில் விடுவிக்க வேண்டும் என்று கேட்டும் அவ்வாறு செய்யவில்லையாகுல்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ-த-மு-க.

ஐயோ தமிழகமே!

தமிழக அரசா வடவர்க்கு வால் பிடிக்கும் அரசா?

தமிழ்நாட்டுப் பாடநூல் வெளியீட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள ஐந்தாம் வகுப்பு வரலாற்றுப் பொத்தகத்தை புரட்டிப் பாருங்கள்! அதில் முழுக்க முழுக்க இந்திய வரலாற்றுத் தொடர்பான பாடங்கள் தாம் உள்ளன. மௌரியப் பேரரசு, குப்தப் பேரரசு, பல்லவப் பேரரசு, கனிசுகர், அர்சர் பேர்ரசுகள், முகலாயப் பேரரசு போன்ற வட இன வரலாற்று நிலைகளை மட்டுந்தாம் பார்க்க முடியும். ஒரு பாடம் கூடத் தமிழகப் பேரரசு(அ) தமிழக வரலாறு இல்லவே இல்லை. மற்றும் ஆரிய, திராவிட நாகரிக நிலைகளைக் குறிப்பிட்டுவிட்டு, அவ் விரண்டு இன நாகரிகங்களும், பண்பாடுகளும் இரண்டறக் கலந்து, இந்திய நாகரிகமாக, பண்பாடாக மாறி விட்டன என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதை எல்லாம் பார்க்கும் போது தமிழ்நாட்டரசே இவ்வாறு தமிழக வரலாற்றை இருட்டடிப்பு செய்யும்போது ஏன் வட நாட்டரசு செய்யாது என்னும் கேள்வி எழுகிறது.

இரண்டகன் தொண்டைமான்!

தமிழினத்தில் இரண்டகர்கள் (துரோகிகள்) வேறு எந்த இனத்தைக் காட்டிலும் அதிகம். இலங்கையின் தமிழ் அமைச்சரும் தோட்டத் தொழிலாளர் தலைவருமான தொண்டைமானும் ஒரு தமிழின இரண்டகரே! அவர் தமிழகத்தில் அண்மையில் செய்தித் தாள்களுக்குக் கொடுத்த நேருரையில் 'இலங்கையின் வல்லாளுமை உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது' என்றும், 'தமிழீழம் கொடுக்க மாட்டோம்' என்றும் திமிராகப் பேசியிருக்கிறார்.

பஞ்சாப்பில் இன இரண்டகர்கள் எவ்வாறு ஒழிக்கப் படுகிறார்களோ அதே வகையில் தமிழகத்திலும் தமிழீழத்திலும் தமிழின இரண்டகர்கள் ஒழிக்கப் படுவார்கள் என்பது காலத்தின் கட்டளை.

சாதிக்காகவா புலிப்படை?

வன்னியர் சங்க நிறுவனர் இராமதாசு அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில், சங்கத்தில் 10 இலக்கம் இளைஞர்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் அனைவரும் வன்னிய விடுதலைப் புலிகள் என்றும் குறிப்பிட்டார். மேலும் தாங்கள் நினைத்தால் அது கண்டிப்பாக நடக்கும் என்றும் எனவே சாதி அடிப்படையில் 20% வன்னியருக்கு உரிமையை அரசு தரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நாம் கேட்கிறோம். வன்னியர்கள் மட்டுமா தமிழகத்தில் தாழ்ந்து கிடக்கிறார்கள்? ஒட்டு மொத்த தமிழினமே தாழ்ந்து கிடக்கிறது என்பது புரியாதா?

இலங்கையில், ஈழ நாட்டு விடுதலைக்காக விடுதலைப் புலிகள் போராடும்போது இங்கே மட்டும் இவர்கள் சாதிக்காக போராடுவது இழிவில்லையா?

பகலில் வாணவேடிக்கையா?

அண்மையில், திருவொற்றியூருக்கு, ஓர் அ.இ.அ.தி.மு.க. தொண்டர் திருமணத்திற்குத் தமிழக முதல்வர் வந்திருந்தார் அதற்காகத் திருவொற்றியூர் நெடுஞ்சாலை முழுவதும் தோரயமாக 100 அடிக்கு ஒன்று மேனி பெரும் பெரும் வளைவுகளும் கொடி, தோரணங்களும் கட்டி அக்கட்சியினர் நகரையே விழாக் கோலமாக்கி விட்டனர். சில இலக்கங்கள் செலவாகியிருக்கும் என நம்புகிறோம். இந்தியாவிலே வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றவர்கள் அதிகம் பேர்(60%) தமிழகத்தில்தாம் உள்ளனர். இப்படி உள்ள ஏழைத் தமிழகத்தில் இப்படிச் செலவு செய்து மக்கள் பணத்தை விணடிப்பது நமக்குக் கவலையளிக்கிறது.

— துரை. தென்னவன்.

மாந்தநேயம் எதற்கு?

ஈழத்தில் தமிழர்கள் வாழும் வடபகுதிக்கு எதிரான பொருளியல் தடையை நீக்காவிட்டால் அங்கு துயரப்படும் தமிழர்களுக்கு —மாந்த நேய(மனிதாபிமான) உதவி அனுப்பப் போவதாக இந்தியா, அச்சுறுத்தியுள்ளதென செய்திகள் கூறுகின்றன. ஈழத் தமிழரின் துயர நிலை புரிகின்றது; ஆனால் இவை இராசீவின் மாந்த நேய உதவிக்கு, உதவி செய்யும் பயனைவிட அச்சுறுத்தும் கருவியாகத்தான் மிகுதியாகப் பயன் படுகிறது போலும்!

ஒப்பந்தமா? அடிமைப்பட்டயமா?

சுப்பிரமணியசாமி தாம் அறிவித்திருந்தவாறு 14—3—87-இல் கச்சத்தீவு செல்ல முயன்றார்; ஆனால் அரசு தடுத்துவிட்டது. 1974 இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி கச்சத்தீவுக்கு இசைவு (விசா) இல்லாமலேயே செல்லலாம். அரசு தான் செய்து கொடுத்த ஒப்பந்த உரிமையை நிலைநாட்ட முயல்பவரைத் தடுக்கிறது என்றால் என்ன பொருள்? ஒருவேளை, வடநாட்டுப் பகுதியாயிருந்தால் அதற்கு அரசு செய்து கொள்வதற்குப் பெயர் ஒப்பந்தம், அதுவே தமிழ்நாட்டுப் பகுதியாயிருந்தால் அதற்குப் பெயர் அடிமைப் பட்டயமோ?

பண்பாடு எங்கே?

அரியலூர் தொடர்வண்டி நேர்ச்சியின் பொழுது தனிநிலை ஊர்திகளில்(Omni buses) அங்கிருந்து திருச்சி, சென்னை செல்ல உருபா 50, 100 என்று வாய்த்த மட்டும் கட்டணம் கேட்டனராம். இதுபோலும் காலங்களில் நம்மவர் குருதியை நாமே உறிஞ்சுவதா? அடிபட்டவர்க்கு உதவ வந்த அதிகாரிகள் என்ன செய்தனரோ தெரியவில்லை!

—வணங்காமுடி

சிறப்பாசிரியர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனர்

ஆசிரியர்:
தென்மொழி மா. பூங்குன்றன்

துணையாசிரியர்கள்:
தென்மொழி. கல்லை. அருட்செல்வன்
தென்மொழி. மா. பொழிலன்

கருத்தாளர் குழு:
பறம்பை அறிவன்,
தென்னவன் கோ,
தென்மொழி. மா. சித்திரச் செந்தாழை ஆறிறைவன்
தென்மொழி. ப. முருகவேள்,
குழந்தை. ஈகவரசன்,
வெங்காலூர். பொறிசெழியன்,
தென்மொழி துரை. தென்னவன்,
மா. செ. தமிழ்மணி,
புலவர்குமர. தன்னொளியன்,
கி. குணத்தொகையன்.

கட்டுரையாசிரியர் குழு:
பாவலர். கடலூர் மணிமாறன்,
பாவலர். இளஞ்சித்திரன்,
பாவலர். ப. எழில்வாணன்,
பாவலர். கொ. செ. சின்னப்பனர்,
தமிழ்ச்சுடர் மணிமுத்து,

உதவியாளர் குழு:
அழ. இளமுருகன்,
வியனரசு,
வே. கோ. வெற்றிச்செல்வன்,
நெடியோன்.

அச்சீட்டாளர்:
தாமரை பெருஞ்சித்திரனர்.
தென்மொழி மின் அச்சகம்.

கழக வேளிர்:
தென்மொழி. இரா. இளம்பிறைச் செல்வன் (பாலகங்காதரன்)

கழக அருளாளர்:
தென்மொழி. நா. இளமாறன்.

கழக அருட்கொடையாளர்:
தென்மொழி. ந. முத்துக்குமரன்,
தென்மொழி. மா. ஆறுமுகம்,
தென்மொழி. த. அரிமாவளங்கோ,
எசு. ஆர். எசு. பிரான்சிசு,
தென்மொழி. ஆறிலிறவன்.

கட்டணம்:

	உள்நாடு	வெளிநாடு வான்	வெளிநாடு கடல்
தனியிதழ்	0-85	6-00	4-00
ஆண்டுக் கட்டணம்	44-00	320-00	220-00
அரையாண்டுக் கட்டணம்	22-00	160-00	110-00
வாணாள் உரு.	750	5000	3500

தொடர்பு முகவரி:
தமிழ்நிலம் சென்னை-600005.
தொலைபேசி: 847829

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும், உணர்வும், உயிர்ச்செறிவும்
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும் தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்; எனவே சலிப்பிலனய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன், உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனர்

தி. பி. 2018 மீனம் (10-4-1987) இதழ் எண்-84

இராமாயண நாடகம்!

ஆரியர்-திராவிடர் என்பதெல்லாம் பொய் என்று பேசும் இந்திராக் கட்சியின் அடிமைத் தலைவர்களே! தொண்டர்களே!

ஆரியர் - திராவிடர் பூசலைத் தொலைக்காட்சி இராமாயண நாடகத்தில் பாருங்கள்!

இந்திய நாட்டைப் பொறுத்த அளவில் பல தேசிய இனங்கள் இருக்கின்றன என்றாலும், அவை அனைத்தும் ஆரியம், திராவிடம் என்னும் இரண்டு பேரினங்களுள் அடங்குபவை ஆகும். இவற்றுள் நம் தமிழ்த் தேசிய இனம் என்பது திராவிடப் பேரினத்துள் அடங்குவதாகும். இத்துடன் இந்தியாவிலுள்ள மற்ற இருபத்து மூன்று இனங்களும் இதில் அடங்கும்.

இந்திய நாடு விடுதலை பெற்றுப் பேராயக் கட்சி ஆட்சிக்கு வந்ததும், அந்த ஆட்சியை வடநாட்டு முதலாளிகளும் ஆரியப் பார்ப்பனர்களும் கைப் பற்றிக் கொண்டு, பிற அனைத்து இனங்களின் உட்கூறுகளையும் சிதைத்து வருவதோடன்றி, இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு என்னும் பெயரில், ஆரியப் பார்ப்பனிய மரபுகளையும், இந்துமதக் கோட்பாடுகளையுமே முகாமைப் படுத்தி வளர்த்தெடுக்கத் தொடங்கினர்.

இதற்குத் துணையாக, பிற இனக் கூறுகளை தம் ஆரிய மரபுக் கூறுகளுடன் உட்கவர்ந்து கொண்டு, அனைத்துச் சிறப்பியல்களுக்கும் தாமே கட்டியங்கூறி உரிமை கொண்டாடித் தன் போலிப் பெருமைகளைக் கரவாக உலகெலாம் தெரியப் படுத்தி வருகின்றனர்.

இவற்றுக்கிடையில், ஆரிய-திராவிட மரபுகளை இல்லை என்றே வரலாற்றை மாற்றி எழுதி—உரைத்து—எதிர்கால இளைஞர்கள் உண்மைகளை அறிந்து கொள்ள இயலாதவாறு — அழிச்சாட்டியம் செய்து வருகின்றனர். **'ஆரியமாவது-திராவிடமாவது? அவை எங்கே இருக்கின்றன'** என்று வெளிப்படையாகவே இப்பொழுதுள்ள இந்திராப் பேராயக் கட்சியின் வரலாறு தெரியாத கத்துக் குட்டித் தலைவர்களெல்லாரும் வாய்க்கு வந்தபடி பேசிப் பகடி செய்தும் வருகின்றனர்.

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

இந்தித் திணிப்பு இன்னும் பரவலாகிறது!

இந்தித் திணிப்பின் மேல் கை எடுக்காமல் மொத்தையடியாக நாம் அடித்துக்கொண்டிருக்கும் போதே, எற்தெந்தச் சந்து பொந்துகள் கிடைக்கின்றனவோ, 'அவற்றிலெல்லாம் அவர்களின் குறுக்குமூளை இந்தித் திணிப்பை நடத்திக் கொண்டே இருக்கின்றது.

அண்மையில், சோவியத்து நாட்டுத்தலைவர் இந்தியா வந்திருந்த போது அவர் உருசிய மொழியிலேயே அனைத்து உரைகளையும் நிகழ்த்தியது பலருக்கும் தெரிந்திருக்கும்.

இந் நிகழ்ச்சி நம் இந்தித் திணிப்பாளர்களை மிகவும் கவர்ந்ததுடன், இந்திப் பொறியின் இன்னுமொரு தெறிப்பு அவர்களின் மூளையில் தட்டுப்படக் காரணமாகியது. இராசீவைத் தலைமையாகக் கொண்ட இந்த இந்திக் குழுக் கூட்டம் இன்னொரு முறை கூடி இந்தித் திணிப்பை மேலும் எப்படிச் செய்யலாம் என்று ஆராய்ந்தது. அதன் விளைவாக வந்ததுதான் இந்தியைப் பற்றிய அடுத்த சுற்றறிக்கை. அதில் **"இந்தியாவிலிருந்து அயல்நாடுகளுக்குச் செல்லும் தூதுக் குழுக்கள் தங்களுடைய பேச்சுகளை இந்தியில் தான் இனி வைத்துக் கொள்ள வேண்டும். இது** வரை ஆங்கிலத்தைப் பயன்படுத்தி வந்ததை விட்டு விடவேண்டும்.'' என்று அப்பட்டமாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இது சுற்றறிக்கை வடிவில் வந்த கட்டளையாகத்தான் உள்ளது என்று திரு. குல்தீப் நய்யார் கூறுகிறார்.

இதன்வழியே இனிமேல் வெளி நாடுகளுக்குச் செல்லும் தூதுக் குழுக்களில் உள்ள அனைவரும் இந்தி தெரிந்தவர்களாகத்தான் இருந்தாக வேண்டும் என்று ஆகிறது.

ஒரு குறிப்பிட்ட நிலையில் தூது அனுப்பப் படும்போது அது தொடர்பாக வேறு சிறப்பான தகுதிகளைப் பெற்றிருந்தாலும் அவை போதா என்ற நிலை உருவாக்கப் படுகிறது.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மட்டுமே இந்தியாவில் எல்லாத் தகுதிகளும் உண்டு என்ற நிலை இன்னும் பரவலாகப்பெற்று, வெளிநாடுகளுக்குச் செல்ல நூற்றுக்கு நூறு வாய்ப்பைத் தமக்குத் தாமே வழங்கிக் கொள்கிறார்கள் இந்த நாட்டை ஆளும் இந்தி-யர்கள்!

இப்போதே வெளிநாடுகளில் இந்தி ஒன்று தான் இந்தியாவில் பேசப்படுகிறது என்று அறிவிக்கின்ற பொய்யான நிலை, எதிர்காலத்திலும் மேலும் தொடர்ந்து விளம்பரப் படுத்தவும் வாய்ப்பை அமைத்துக் கொள்கிறது.

இந்த இந்திக் குழுவில் இந்தக் கருத்தை முதலில் எடுத்துரைத்த ஒரிசா முதல்வர் பட்நாயக், "இந்தியத் தூதுக்குழு வெளிநாடுகளில் ஆங்கிலத்தில் பேசுவதால் இந்தியத் தன்மதிப்பு (சுயகௌரவம்) கெட்டு விடுகிறது'' என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக திரு. குல்தீப் நய்யார் தம் கருத்தைத் தெரிவிக்கும்போது, "அயல் நாடுகளில் **இந்தியைப் பேசாததால்** இந்தியாவின் தன் மதிப்பு கெடுவதில்லை. ஆவர்கள் அங்கிருந்து அள்ளிக் கொண்டு வரும் வெளிநாட்டுப் பொருள்களால்தாம் இந் நாட்டின் தன்மதிப்பு கெடுகிறது. அதைத் தடை செய்தாலே போதும்'' என்று கூறுகிறார்.

இவர்களுடைய தன்மதிப்பு என்பதெல்லாம் இந்தி பேசுகிறவர்கள் நலம் என்ற வட்டத்திற்குள் மட்டுமே அடங்கிவிடும். அந்த நலன் கிடைக்காத காரணத்தினாலேயே ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற உணர்வு இவர்களுக்கு வந்தது போலும்! பின்னர், உரிமை பெற்ற இந்தியாவில் தங்கள் நலனுக்காக என்னென்ன செய்து கொள்ள வேண்டுமோ, அத்தனையும் செய்து கொண்டு விட்டனர்! உரிமை கிடைத்தவுடன்-தன் மேல் அமர்ந்தவன் இறங்கியவுடன்-சட்டென்று நிமிர்ந்து, தம்மினும் கீழாகக் குனிந்து கொண்டிருந்தவர்களின் முதுகில் ஏறி அமர்ந்து கொண்டனர், இவர்கள். ஆங்கிலேயனைச் சுமந்த நாம் இன்று 'இந்தி'யனைச் சுமக்கிறோம். அவனைவிட இவன் கொழுத்த பன்றியாகக் கனக்கிறான். அந்தப் பன்றி இப்போது இறுதியான உறுமின உறுமல்தான் இந்த அறிக்கை!

இந்திக்கு வால்பிடித்துக் கொண்டு இங்கிருக்கிற பார்ப்பனர்கள் என்றாவது ஒருநாள் இந்தி தான் இந்த நாட்டில் நிலவும் என்பதில் நம்பிக்கையுடன் இருந்து கொண்டு, பெரும்பான்மை மொழி வருவதே மக்களாட்சி என்று ஞாயம் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் பெரும்பான்மை கருதி சமற்கிருத நிகழ்ச்சிகளும் செய்திகளும் பரப்பப் பெறுகின்றனவோ, நாம் அறியோம்!

இந்த நாட்டில் பிறந்துவிட்ட மற்ற தேசிய மொழியாளர்களுக்கு என்றுதான் தாய்மொழியுணர்ச்சி வருமோ? அதுவரை இத்தகைய ஏமாற்றுகளும் புரட்டுகளும் எத்துகளும் நடந்து கொண்டுதான் இருக்கும் என்பதில் ஐயமில்லை!

- குன்றன்.

திராவிட, இந்திய இந்துமதப் பிடியிலிருந்து மீளாதவரை நாம் 'தமிழர்' அல்லர்.

—மார்க்சிய சிந்தனையாளர் திரு. குணா— எழுதிய '*தமிழின மீட்சி*'யில் அன்றைய நயன்மைக் கட்சியில் தமிழரல்லாத திராவிடர்களின் கொட்டமும் திராவிடம் என்ற 'மாயை'யிலும் எப்படித் தமிழன் தன்னிலை இழந்து போனான் என்றும் விளக்கப் பட்டிருக்கின்றன. —அவ் விளக்கம் இன்றைய அளவில் தேவையற்றது என்றும், இதைப் பெரியார் அவர்களே முன்கூட்டி எழுதியிருக்கிறார் என்றும், ஏனினும் 'திராவிடர் கழகம்' —எனும் பெயரின் இன்றியமையாமையைப் பற்றியும் விளக்கிவிட்டு, ஒரு தோழமைக் கழகத் தோழர் கூறியது நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

—அ'தாவது தமிழர் கழகம்—எனப் பெயர் வைத்துவிட்டால் பார்ப்பனர் அனைவரும் தம்மைத் தமிழர் என்று பறைசாற்றிக் கொண்டு உள்ளே நுழைந்துவிடுவர்; ஆனால் திராவிடர் கழகத்தில் தன்னை எந்தப் பார்ப்பானும் திராவிடன்—என்று கூறிக் கொண்டு உள் நுழைந்துவிட மாட்டான்—என்று பெரியார் குறிப்பிட்டதாகவும், இவ்வுண்மை விளங்காமல் தோழர். குணா—அவர்கள் திராவிடர் கழகத்தைச் சாடி இருப்பதும், அவர் பார்ப்பன இயக்கங்களான ஆர். எசு. எசு., பிற இயக்கங்களைச் சாடாததைக் கொண்டும் அவர் ஆர். எசு. எசு.-இன் பின்னணியிலிருந்து எழுதியிருக்கக்கூடும்—என ஐயப்பட வேண்டியிருக்கிறது என்றும்—கூறினார். இந் நிகழ்ச்சியின் பின்னணியில் நாம் சில அடிப்படைக் கருத்துகளைச் சொல்லியே ஆக வேண்டும்.

திராவிடர் கழகத்தில் உறுப்பினராக இணைந்தோ, அல்லது அக் கழகத்தின் ஈடுபடுபவராகவோ இயங்குதும் எவரும் தம்மைத் திராவிடர்—எனச் சொல்லிக் கொள்ள வேண்டுமென்பது கட்டாயமில்லை. அப்படி ஒருவேளை கழக உறுப்பினர் படிவத்தில் மட்டும் தம்மைத் திராவிடர்—என்று ஒரு முறை குறிக்க வேண்டுமானால், ஏதோ கலகம் செய்ய வேண்டும் என வருகின்ற பார்ப்பனருக்கு அது தடையன்று.

ஆக, பார்ப்பனர்கள் இன்றைய அளவில் சேர்த்துக் கொள்ளப்படக் கூடாது என்ற சரியான சிந்தனைக்கு இயக்க நடைமுறையும், தேர்வுமே அடித்தளமாகக்-காரணமாக அமையுமேயல்லாமல், இயக்கப் பெயர் ஒரு காரணமாக அமைந்துவிடாது. ஒருவேளை பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் —எனக் கூறிக் கொள்கிற ஓர் இயக்கத்தில்கூட பார்ப்பனனே வந்தும் இணையலாம்—என்பதை அவர்கள் ஒரு கருத்தாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும், தன்னைத் திராவிடன் — என்பதே பார்ப்பனியத்திடமிருந்து, அல்லது பார்ப்பன ஆளுமையினின்று விடுபட்டது ஆகாது. தன்னை 'இந்து'-வாக ஏற்றுக் கொண்டிருக்கிற ஒவ்வொருவனும் பார்ப்பனியத்திடம் அடிபணிந்தவனே; பார்ப்பனியத்திற்கு அடிபணிந்து கொண்டு யாரும், பார்ப்பனர் இந்தப் பெயரை வைத்துக் கொண்டால் வந்து இணைய மாட்டார் என்று கூறுவது— எந்த வகையில் சரியானது என்பது விளங்கவில்லை.

—இ'து இவ்வாறு இருக்க,

இன்றைக்குத் தமிழர்கள்' எந்த அளவு முற்போக்குப் பேசினாலும், தங்களைத் தமிழர்கள் என்றே சொல்லிக் கொண்டாலும், அவர்கள் அனைவரும் இந்து மதத்தினராகவே கருதப் படுகின்றனர்.

பார்ப்பன வருணச்சிரமத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற இந்து மதத்தைத் தனதாக்கிக் கொண்டிருக்கிற இந்திய எல்லையிலிருந்தும், 'புது இந்திய மாயை'யான திராவிடச் சிந்தனையிலிருந்தும் தமிழன் அறுபடாதவனாய்த், தன்னைத் தமிழன் என்றும், தன் மொழி தமிழ் மொழி என்றும், தன் நாடு தமிழ் நாடு என்றும் உணராதவனாய், இருக்கிற நிலையில் எவனும் இனியும் இங்கு அடிமையாகவே வாழவேண்டும்.

கடந்த 1984-ஆம் ஆண்டு வெளியிட்ட, 1981-ஆம் ஆண்டின் மக்கள் புள்ளிக் கணக்கைப் பார்க்கும் பொழுது:

	இந்தியா.		தமிழ்நாடு.	
	கோடி:	இலக்.	கோடி.	இலக்.
மக்கள் தொகை :	66	50	4	84
இந்துக்கள் :	54	90	4	30
இசுலாமியர் :	7	50	—	25
கிறித்துவர் :	1	60	—	27
சீக்கியர் :	1	30	4395 பேர்கள்	
புத்தமதத்தினர் :	—	47	735	,,
சைன ,, :	—	32	49564	,,
பிற மதத்தினர் (இந்து மத உள்மதத்தினர்) :		27	16972	,,
மதமற்றோர் (அல்) மதத்தைக் குறிக்க விரும்பாதோர் :	60,217 பேர்கள்		1870	,,

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

—இந் நிலையில் பிற மதத்தினர்—என்ற வரிசையில் தமிழகத்தில் குறிக்கப் பெற்ற மதங்களும், அம் மதத்தினர் எனத் தங்களைக் குறித்துக் கொண்டோரும்;

மதம்.		எண்ணிக்கை.
1.	திராவிடம்	289
2.	திராவிட	20
3.	திராவிடமதம்	34
4.	ஈசுவரமதம்	5
5.	சீவகாருண்ய மதம்	7
6.	குருக்கள்	7
7.	குலாலர் (Kulalar)	9
8.	சாலையாண்டவர் மெய் மதம்	5
9.	மெய்வொளி மதம்	4
10.	மெய்வழி மதம்	10
11.	மெய்வழி	2
12.	மறலி தண்டசாலை (Marali thenda salai)	2
13.	மறில் கைதீண்டா மெய் மதம் (Maril Kaitheenda Mai Matham)	1
14.	திருக்குறள் மதம்	8

(Census of India-1981).

—இதுபோலும் குறிக்கப் பெற்ற மேற்கண்ட பட்டியல் வழி பிற இம் மதத்தினர் யாவரும் 'இந்து மதம்'—எனும் தலைப்பின் கீழே அரசுப் பதிவேட்டில் குறிக்கப் பெற்றிருக்கின்றனர்.

இப் பார்ப்பனியத்தை எதிர்க்கும் திராவிடர் என்ற பெயரே, இந்து மதத்திற்குள் அடங்குகிற பொழுது, ஏன் பார்ப்பான் திராவிடர் கழகத்திற்குள் அடங்க மாட்டான் என்பதே நம் வினா?

மேலும் திராவிடர் — என்ற பொதுப் பெயரை நம் தமிழ் மக்களின் எழுச்சிக்குப் பயன்படுத்த இயலாது என்பதே திரு. குண— அவர்களின் முறையீடு. அதைத் தம் 'தமிழின மீட்சியில்' குறிப்பிடும் பொழுது:

'திராவிடம்' — எனும் பெயர்ப்பலகையை மாட்டிக் கொண்டு தமிழர்களின் இனமானத்தையும், இன விடுதலையையும் ஆதரிப்பதாகச் சொல்கின்றவர்களின் கூற்று முன்னுக்குப்பின் முரணானது. அவ்வாறு சொல்கிறவர்களிடம் உள்ளத் தூய்மையும் கொள்கைப் பிடிப்பும் இருப்பின், அந்தத் 'திராவிடம்' பெயர்ப் பலகையை முதலில் அப்புறப் படுத்துவதுதான் சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க வழி செய்யும். தமிழகத்தைச் சுரண்டிக் கொழுத்து அலைக்கழித்து வருகிற 'இந்து, இந்தி(ய)த்' தேசியத்திலிருந்து மட்டும் மீண்டால் போதாது. தமிழர்கள் தம்மைத் 'திராவிடர்' —என்று சொல்லித் தொண்டிருக்கும் மாயையிலிருந்தும் மீண்டாக வேண்டும்'

—என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

எனவே உண்மையாகத் தமிழக மக்களின் விடுதலையைப் பெற விரும்பும் ஒவ்வொருவரும் தம்மை, வருணச்சிரம அமைப்பையே உடலாகப் பெற்றிருக்கும் இந்து மதத்தினின்றும், அதையே தம் சதையாகப் பெற்றிருக்கும் இவ் விந்திய நாட்டினின்றும் விடிவு பெற்றாக வேண்டும் —எனும் நோக்கில்,

மதமற்ற, சாதியற்ற, பொருளியல் வேறுபாடு அற்ற சமநிலைக் குமுக அமைப்பை நோக்கி, இன்றைய நிலையில் முழுமையாக அடிமைப்பட்டுக் கிடக்கின்ற இத்தமிழக உழைக்கும் மக்களின் தலைமையில் போராடுவோமாக!

- விடுதலை வேட்பன்.

தூக்கிலிடுவதா? தூக்கில் தொங்குவதா?

அண்மையில் ஒரு கல்லூரியில் மாணவர்களிடையே பேசிய பொழுது கலைஞர், தமிழீழத்தில் தமிழர்கள் படும் துயர நிலையைச் சுட்டிக்காட்டி, இத்தகைய துயரத்திற்கு ஐந்து கோடித் தமிழர்களும் ஒரு நாள் அறிவித்துவிட்டு தூக்கில் தொங்கலாம் என்பதாகப் பேசியுள்ளார்.

அரசியல் தலைவர்கள் போலன்றி, இளைஞர்கள் எதையும் செயல்வடிவில் செய்யத் துடிப்பவர்கள் வேகமானவர்கள்; துணிவானவர்கள்; அதிலும் மாணவர்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டியதில்லை. இவர்களுக்குத் தேவை நல்ல வழிகாட்டுதலே. அத்தகையவர்களைத் தமிழினத்திற்கான ஆக்கச் செயல்களுக்குப் பயன்படுத்தாமல் அவர்களின் உணர்வுகளைத் தீக்குளித்தல் போன்ற தவறான பாதைக்குத் திசை திருப்புவது தமிழினத்திற்குப் பேரிழுக்கும் பேரிழப்பும் அன்றோ?

தமிழ்நாட்டில் பெரியதொரு கட்சியைக் கையில் வைத்துக் கொண்டு எதைச் சொன்னாலும் செய்யக் கூடிய வலுவான தொண்டர் அணியையும் பின்னுறுப்பாகக் கொண்டுள்ள கலைஞர் இவ்வாறு பேசுவதைத் தவிர்த்துத் தம் இளமைக் காலத்தில் செயல்பட்டதுபோல உண்மையான ஆக்கச் செயல் செய்ய வருவதே நல்லது.

கலைஞர் பேச்சின்படி யாரும் தம் உயிர் போக்கிக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடக் கூடாது. வேறு வகைகளில் சிந்தித்துச் செயல்பட வேண்டும். எதிரிகளைத் தூக்கிலிடுவதா? நாம் தூக்கில் தொங்குவதா?

—குணத்தொகை.

Scanned with CamScanner

நாட்டு நடப்புகள்!

நாமும் தேசியம் பேசுகிறோம்; அவர்களும்...?

தேசியம் பற்றிய உணர்வு, பிறழவுணரப் படுகிறது! தடம்புரண்ட சிந்தனைப் போக்கு தலை தூக்குகின்றது. பன்னாட்டு உறவுகளையும் செரித்துக் கொள்வதில் அடிப்படை மக்கள் சரியாகவே செயல்படுகின்றார்கள்! ஆனால், படிப்பாளிகளே தவறுகளுக்கும், குற்றங்களுக்கும் அறிவுத் திமிரால் இடமளித்து விடுகின்றார்கள். இந்த முரண்பாடு வளர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டும் என்பதே நம் கவலையாகும். ஆகவே, தேசியம் பற்றிய சிந்தனைத் தூண்டுதலுக்கு நம்மை நாம் ஆளாக்கிக் கொள்வோம்.

பாரத தேசம். எனவே, 'பாரத தேசியம்' என்ற பாவனை பேசுகின்றனர். உலகத் தேசியம் பேசுகின்றவர், திருக்குறளை உலகத் தேசிய நூலாக்கக் கூட விருப்பம் கொள்வதுண்டு. இவர்களின் உணர்வு மேல் கீழ் எனப் புரள்கின்றது. உண்மையான தேசிய உணர்வின் எல்லைக் கோடுகளைப் புரிந்து கொள்ள மறுப்பவர்கள்—அறியாதவர்கள் தொடர்ச்சியான தவறுகளுக்குத் தடம் அமைத்து விடுகிறார்கள்!

நாம் ஆரவாரங்களுக்குள் அகப்படாமல் தெளிவான அறிவூக்கம் பெற முயல்வோம்!

'விசய பாரதம்', தமிழ்த் தேசிய உணர்வைத் தடுக்கின்றது; இது மதமெனும் சாம்பல் மேட்டிலிருந்து புழுதி கிளப்புகின்றது.

கலைஞரும், அண்ணாவும் 'சாரம் கட்டாத முசுலிம்', என்று மதச் சேற்றில் புதைத்துக் கொள்வதும் அரசியல் ஊதியம் கருதியே ஆகும்!

சாதி, மதமென்னும் 'தனிமாந்தன் உரிமை'களை, மீளவும் அரசியல் அதிகார மேடையில் ஏற்ற முயல்கின்றார்கள். இதனால், தேசியம் என்பது, மதத்தையும் சாதியையும் வைத்துக் கணிக்கப் பெறுகின்ற அவலம் ஏற்பட்டுள்ளது.

'கலைஞர்' முசுலிம் குல்லா போடுவதும், 'நேரு' போன்றவர்கள் அரசியல் சாய்காலை வலுப்படுத்திக் கொள்ளப் 'பல்வேறு கோலம்' புனைந்து அவ்வப் பண்பாடுகளின் ஆதரவாளர்களாகப் பகட்டிக் கொள்வதையும் நாம் பல காலம் பார்த்து வருகின்றோம்!

மூடப் பழக்க வழக்கம், அறியாமை என்பவை ஒரு மதத்தை மட்டும் சார்ந்தவை ஆகா. மாந்த இனம் அனைத்திற்கும் உள்ள சாவக்கேடாக இவற்றைக் காணுதல் வேண்டும்.

'வளர்ந்து வரும் வகுப்பு-(வர்க்க)ச் சார்பற்ற சிந்தனை தீம்பு விளைவிக்கக் கூடும். சுரண்டும் வகுப்பாரின் கீழ்மைப்படவும் பெரும்பான்மை மக்கள் துயரப்படவும் கூடிய தீமை விளையும்! அதேவேளை, மதம்...முதலிய அழிந்துபடவுள்ள' பழைய சிந்தனைகளைத் தூக்கி நிறுத்த முயல்வது தவிர்க்கப்படவும் வேண்டும்,

பாட்டாளி வகுப்புணர்வுடன் கூடிய பண்பாட்டுறவை வலுப்படுத்தும் முயற்சி ஓங்குதல் கட்டாயமாகும்!

—பறம்பை அறிவன்!

'குறுந்தாடி'-கூடாது! 'பெருந்தாடி'-வைக்கலாம்!

கேரளத் தலைமை அற மன்றம் அறிவிப்பு!

தம் மதப் பற்றுதல் காரணமாக திரு. முகமது குட்டி என்னும் காவலர் குறுந்தாடி வைத்திருந்ததை எடுக்கக் கூறினார் அவரின் இந்துமத வெறி அதிகாரி.

இந்தியத் தேசியப் பாடலைப் பாடுவது என்பது கட்டாயம் அன்று, என்ற வழக்கின் தீர்ப்பை அடிப்படையாக வைத்து திரு. முகமது வழக்கு மன்றத்தில் தாம் குறுந்தாடி வைக்க வழக்குப் போட்டார்.

மதச் சார்பற்ற இந்திய நாட்டில், மதத்தைப் பரப்பும் நோக்கில் அரசுத்துறையினர் எதுவும் அணிதல் கூடாது என்றும், குறுந்தாடி வைப்பது என்பது இசுலாமிய மதச் சட்டம் அன்று என்றும், திரு. சியா உல் அக்-(பாகிஸ்தான் தளபதி) அப்படி வைக்கவில்லை என்றும் காரணம் காட்டிக் குறுந்தாடியை எடுக்கச் சொல்லிக் கேரளத் தலைமை அற மன்றம் தீர்ப்பு வழங்கியது.

தீர்ப்பு வழங்கிய திரு. சங்கரன் நாயரிடம் நாம் கேட்பது இதுதான் :

ஐயப்பப் பூசைக்காகவும், பிற இந்து மத வெறி விழாக்களுக்காகவும் எந்த அரசு அலுவலர்களும் இந்து மதத்தைப் பரப்பும் வெளிநோக்கில் ஏதும் அணிவதில்லையா? தாடிகளை நீளமாக வளர்ப்பதில்லையா? கொட்டைகளைக் கழுத்தில் இறுக்கிக் கொள்வதில்லையா?

—என்னய்யா முறை இது?

—இந்து மத அடையாளங்களை அணியலாம். பிற மத அடையாளங்களைப் பின்பற்றக் கூடாதா? மதச் சார்பற்ற இந்திய நாட்டில் மத வெறி கொண்ட ஆர். எசு. எசு. இன் கொள்கை மட்டுமே திணிக்கப் பெறுகிறதே, அஃதெப்படி?

—மா. பொ.

Scanned with CamScanner

கருத்தரங்கை வரவேற்று வாழ்த்திய நெஞ்சங்கள்!

38. நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!

அன்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, வணக்கம். மாநாடு சிறப்புற நடந்து கொண்டிருக்கும். அது சிறப்புற நிறைவுற நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!

அன்புள்ள, —பர். க. ப. அறவாணன். (வழிநிலை) பழநி.

39. நல்லமுடிவை அளிக்கட்டும்!

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா, வணக்கம்... தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு சிறப்பாக நடைபெறும் என்னும் நம்பிக்கையுடன் நல்ல விளைவை—முடிவை அளிக்கட்டும் என வாழ்த்துகிறேன்.

—ய. மணிகண்டன், முத்துப்பேட்டை.

40. நல்ல வண்ணம் நடந்தேறியிருக்கும்!

அன்பிற்கினிய அய்யா அவர்களுக்கு, வணக்கம். கருத்தரங்குக்கு என்னால் வர இயலவில்லை. வர இயலாமைக்குப் பெரிதும் வருந்துகிறேன். கருத்தரங்கு நல்ல வண்ணம் நடந்தேறியிருக்கும். தென்மொழியில் முழுவதும் படித்துத் தெரிந்து கொள்வேன். தங்கள், —ந. தருமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முத்துப்பேட்டை.

41. தீர்மானங்களை விளக்கி எழுதவும்.

அன்புசால் ஐயா, வணக்கம். தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு சிறந்த முறையில் நடந்தேறி இருக்கும் எனக் கருதுகிறேன். இதுநாள் வரை மடல் வழித் தொடர் கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். நன்கொடையைப் பணவிடைவழி விடுத்துள்ளேன். பெற்றுக் கொண்டு மாநாட்டுத் தீர்மானங்களை விரிவான முறையில் விளக்கியெழுத வேண்டுகிறேன். நன்றி.

தங்கள், - மருத்துவர். மறையரசன், ம இ., அ இ. நீடாமங்கலம்.

42. எதிர்காலத்திற்கொரு திருப்புமுனை!

தமிழின விடுதலைக்குப் பாடாற்றி வரும் தனித்தமிழறிமா பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம்! தங்கள் உடல்நலக் குறைவு பற்றிய செய்தியைத், தென்மொழி வழி அறிந்தேன்! தாங்கள் நலமடைந்தும் இத் தமிழினத்திற்கு வழி காட்டியும் நெடுநாள் வாழவேண்டும் என எல்லாம் வல்ல இறைப் பேராற்றலை இறைஞ்சினேன்... கருத்தரங்கிற்கு அலுவலாய்ப் பணி கரணியமாக விடுப்புக் கிடைக்காமையாலும் வெளியூர் சென்றிருந்ததாலும் வரவியலாமை குறித்து வருத்தம்! பொறுத்தருள்க... எதிர்காலத்தில் தமிழின வாழ்வின் திருப்புமுனையாக இம் மாநாடு அமைந்துள்ளது. சீரிய முடிவுகளையே மேற்கொள்வீர்கள் எனத் தெரிந்தாலும், கலந்து கொண்ட பேராளர்களை ஒப்போலை முறைக்கு விட்டதில் மிக்க அளவிலான கருத்துகளை ஏற்றாலும், தமிழக விடுதலையே நம் எண்ணம், சொல், செயல் என முடிவேற்க வேண்டிய நிலைதான் இப்போது உள்ளது.

தங்கள், - க. கதிர்குன்றன், திருச்சி-1.

'கலியுக இராமாயணம்'

0 'இராவண லீலா'—நடத்துவது குற்றமன்று; ஆனால் அதைக் கண்டித்து நடத்தப் பெற்ற 'இராம லீலா'—கொலைக் குற்றமாகக் கருதப் பட்டுப் பெரியாரை இழித்துரைத்தனர் பார்ப்பனர்கள்.

0 கருநாடகத்தில் 'அம்மணமாக' பெண்களும் ஆண்களும் கடவுளை வழிபடுவதும் மதப் போர்வையில் கூத்தாடுவதும் தவறன்று; ஆனால் அதைக் கண்டித்துக் கருத்துரையாகப் பெண் காவலர்கள் நடத்திய நிகழ்ச்சிக்குக் கண்டனம் தெரிவித்தது பார்ப்பன வெறி மதம்.

0 அதே போல் இன்று; இராமாயணத்திற்கு எதிர்ப்பாக எடுக்கப் பெறும் 'கலியுக இராமாயணத்'திற்கு எதிர்ப்பு தெரிவித்துக் கொக்கரிக்கின்றன பார்ப்பன அமைப்புகள்.

'கலியுக இராமாயணம்'—என்ற இந்திப் படப் பாடல்கள் கொண்ட நாடாச் சுருளை எரித்திருக்கின்றன பார்ப்பனிய அமைப்புகள்.

இராமாயணத்தைக் கொச்சைப் படுத்தி, அக் கதை உறுப்பினர்களை இழிவு படுத்திக் 'கலியுக இராமாயணம்'—எடுக்கப் பட்டாலும் அதன் முடிவு அனைவரையும் மாந்தர்களாக நிலைப் படுத்துகிறது.

—ஆனால் அதைப் பொறுக்க முடியாத பார்ப்பனப் பிஞ்சுகள், கடும் எதிர்ப்புத் தெரிவித்துக் கிளர்ச்சி செய்து வருகின்றன.

—கதைத் தலைப்பையும், அதில் வரும் பாடல்களையும், பல காட்சிகள், உரையாடல்களையும் மாற்றும்படியும், நீக்கும்படியும் கேட்டு—ராசுட்டிரிய அக்ரக்ட்சண சமிதி, அகில இந்திய இந்து சிவசேனா, விசுவ இந்து பரிசத்—போலும் பார்ப்பன அமைப்புகள் போராடுகின்றன.

—தமிழகத்தில் இராமாயணத்தை எதிர்த்து திரு. எம். ஆர். இராதா நடித்த நாடகம் 'கீமாயணத்தை'ப் போன்று, திரு. மனோச் குமார்—'கலியுக இராமாயணத்'தை மிகத் துணிவாக எடுத்ததற்கு மகிழ்கிறோம். 0

உ.த.மு.க. கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம்!

கடந்த 21-3-87 காரி, மாலை 7 மணியளவில் சென்னை, சைதாப்பேட்டை, தேரடித் தெருத் திடலில். சென்னை மாவட்ட, உலகத் தமிழின முன்னேற்றக் கழகக் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடை பெற்றது. நிகழ்ச்சிக்குச் சென்னை மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் தென்மொழி. ப. முருகவேள் தலைமை தாங்கி உரையாற்றிய பின் உ.த.மு.க. கொள்கைகளை அதன் செயற்பாடுகளை விளக்கியும் தமிழகத்தில் தமிழினம் எவ்வாறு நலிவுற்றுள்ளது என்றும் திருவாளர்கள். தென்மொழி நா. இளமாறன், மருத்துவர் கோவிந்தனுர், தென்மொழி கல்லை அருட்செல்வன், தென்மொழி. வ. செ. தமிழ்மணி, மு. கதிரவன், திருவாட்டி இறை பொற்கொடி, தமிழ்முகிலன், சிவபெருமான், நெடியோன், தமிழீழம் பட்டி ஆகியோர் பேசினர்.

இறுதியாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனுர், சிறப்புரை யாற்றுகையில், 'தமிழெங்கே தமிழனெங்கே' என்னும் தலைப்பில், தமிழ்மொழி, தமிழனின் இப்போதைய இரங்கத்தக்க நிலை ஆகியவற்றை விரிவாக எடுத்துக் கூறி விளக்கினுர். அவர் உரையாற்றுகையில், 'தமிழ்நாட்டு அரசு கல்விக்காகப் பல வரிகளை மக்களிடம் போட்டுள்ளதென்றும், இதனுல் ஏழை மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியிலோ பொறியியல் கல்லூரியிலோ எளிதாக நுழையும் வாய்ப்புண்டா? சிறுவர் கல்விக் கூடங்களில் கூட நுழையும் வாய்ப்பில்லை. இவ்வாறிருக்க வரிகளால் மக்களுக்கு விளையும் பயன்தான் என்ன' என்றும்,

'இந்தியாவில் இரண்டே இனங்கள்தாம் உள்ளன; ஒன்று திராவிட இனம், மற்றென்று ஆரிய இனம். இந்து மதம் என்று ஒரு மதமே இல்லை. தமிழில் தான் அனைத்து மெய்யறிவு நூல்களும் உள்ளன' என்றும்,

'இந்தியாவை முழுவதுமாக ஆண்ட இனம் திராவிட இனம்தான். அந்தக் காலத்தில் இந்தியா என்ற பெயர் இருக்கவே இல்லை. வேறு எந்த இனமும் இந்த நாட்டை இந்தியா என்று கூறி ஆண்டதாக வரலாறு இல்லை' - என்றும்,

'தமிழ் மொழியே மூல மொழி. தமிழிலிருந்து பெருகியதுதான் திராவிட மொழி. அதிலிருந்து பிரிந்ததுதான் பிராகிருத மொழி. இந்தப் பிராகிருத மொழியிலிருந்து வளர்ந்ததுதான் பாலி மொழி'.

'ஆங்கில மொழியின் அகவை 1300 ஆண்டுகள். உருசிய மொழியின் அகவை 1100 ஆண்டுகள். இன்றைக்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் இந்தி மொழி என்ற ஒரு மொழி கிடையாது. ஆனுல் தமிழ்மொழி என்றைக்குத் தோன்றியது என்று அறுதியிட்டுக் கூற இயலாது' - என்றும்,

'தமிழனுக்குத் தமிழில் படித்தால் வேலையில்லை. வேறு எந்த மொழிக்காரனுக்கும் உலகில் இப்படிப்பட்ட அவலநிலை-மானமற்ற நிலை இல்லை'.

'ஒரு மொழியால் அரசாண்ட பெருமையுடைத்தவன் தென்னவன் - பாண்டியன் - மீனவன் - பரதவன். பரதவன் நாடே இன்று பரத நாடு; பாரத நாடு என்று வழங்கப் படுகிறது. 'பாரதம்' என்று அவர்கள் கூறுவது தவறு.'

'தமிழ்த் தெருக்களில் தமிழ் இல்லை. கடைகளில் தமிழில் பெயர்ப் பலகை இல்லை. தமிழ் ஆட்சி அலுவலகங்களில் தமிழ் இல்லை. தமிழில் படித்துப் பட்டம் பெறும் பட்டச் சான்றிதழ்களில் தமிழ் இல்லை.'

'பள்ளிச் சான்றிதழ்களில் 'இந்தியன்' என்றுதான் குறிப்பிடப் படுகிறதே ஒழிய 'தமிழன்' என்று எங்கேயாவது குறிப்பிட வாய்ப்புண்டா? மற்ற மாநிலங்களில் கூட இப்படிப்பட்ட இழிநிலை இல்லையே' -என்றும்,

'இராசீவ் காந்தியும், செயவர்த்தனவும் ஒரே ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அதனுல்தான் இலங்கைத் தமிழனைக் காப்பாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்க இந்தத் தயக்க நிலை!'

'தமிழ் நாட்டில் தமிழன் யார்? யாருமேயில்லை. நான் முதலியார், நான் வன்னியர், நான் படையாட்சி; நான் நாடார், நான் பறையன் என்று கூறிக்கொள்ள ஆள்கள் இருக்கிருர்களே தவிர, நான் தமிழன் என்று கூறிக் கொள்ள யாரும் முன்வருவதில்லை. இந்த நிலைதான் அரசியலிலும் தொடர்கிறது' என்றும் கூறி, இறுதியாகத் 'தமிழ் வாழ வேண்டுமென்றுல், தமிழன் தன்னுணர்வு பெற்றுத் தனித் தன்மையாக வாழ வேண்டுமென்றுல், தமிழனுக்கு முழு உரிமை பெற்ற தனிநாடு அமைந்தாக வேண்டும். அப்போதுதான் தமிழினத்திற்கு விடிவு ஏற்படும்' என்றும் பேசி முடித்தார். இவ்விளக்கப் பொதுக் கூட்டத்தை அமைக்க ஒத்துழைத்த வேளச்சேரி பகுதிப் பொறுப்பாளர் திரு. வே. கோ. வெற்றிச் செல்வன் நன்றியுரை கூற இரவு 11 மணியளவில் கூட்டம் இனிதே முடிவுற்றது.

- நம் சிறப்புச் செய்தியாளர்.

Scanned with CamScanner

மெரீனா முதல் மருதையாறு பாலம் வரை

-- இரணியன்.

இந்தியா, நாளுக்குநாள் வெளிநாட்டு வல்லமைகளின் திறந்த மடமாக ஆகிக் கொண்டிருக்கிறது! எந்த ஓர் அயல்நாட்டின் உளவு நிறுவனமும், இந்தியாவில் எவ்வளவு பெரிய உயர் அதிகாரியையும் விலைக்கு வாங்குவது பொதுநடைமுறை ஆகிவிட்டது. மிகக் குறைந்த காசுகளை வீசுவதன்மூலமே, மிகப் பெரிய "தேசக் கழுக்கங்களை"யும் அவர்கள் எளிமையாக வாங்கிச் செல்கிறார்கள்! இந்திய அதிகாரிகள் பலரும், இந்திய அரசுக்கு வஞ்சகம் புரிபவர்களாகவும், தாங்கள் உளவு கூறுவதற்காகக் கைக்கூலி பெற்ற அயல் நாட்டினுக்கே உண்மைத் தொண்டர்களாகவும் மாறிப் போய் விட்டார்கள்! அமைச்சுப் பதவியில் உள்ளவர்களில் சிலரும்கூட இந்தப் பண்பு உள்ளவர்களாகவே இருக்கிறார்கள்! இருந்திருக்கிறார்கள்!

அயல்நாட்டுப் பணங்களால், இங்கே மத அமைப்புகள் பல செயல்படுகின்றன! கட்சிகள் - இயக்கங்கள் இருந்து வருகின்றன! 'புரட்சியாளர்' என்னும் பட்டயத்தைச் சிலர் ஏந்திக்கொண்டுள்ளனர்! ஆய்வுகள் என்னும் பெயரில் இதழ்களும் வெளியீடுகளும் வருகின்றன! வெகுமக்களுக்கான இதழ்கள் பலவும் நடத்தப் பெறுகின்றன!

இவற்றில் ஒலிக்கும் குரலெல்லாம், அயல் நாட்டுக் கொள்ளையரின் குரல்களே என்பதை நாம் ஐயந்திரிபுற விளங்கிக் கொள்ளலாம்!

இந்தியாவின் பொது நிலையே இப்படியென்றால், தமிழ்நாட்டின் நிலைபற்றி நாம் கூறவே வேண்டியதில்லை! அயல் நாட்டு உளவுக் கும்பல்களுக்கு, அன்றும் இன்றும் ஓய்வு மாளிகையாகத் திகழ்வது இந்தியாவில் தமிழ்நாடுதான்! இந்த உளவுக் கும்பல்கள். தமிழர் நலம் நாடும் இயக்கங்களுக்குள்ளும், அமைப்புகளுக்குள்ளும், ஊடுருவி இருப்பதுடன், தமிழ் நலம், தமிழர் நலம் என்று பேசவும் கூடத் தொடங்கியுள்ளன! இவை, தமிழர் உரிமைப் போர் வரலாற்றைக் களங்கப் படுத்துவதையும், தமிழத் தலைவர்களைச் சிறுமைப் படுத்துவதையும், தமிழின விடிவைச் சிதைவு படுத்துவதையும் தம் உயிர் நோக்கமாகக் கொண்டுள்ளன!

பகைத்துக் கெடுத்தல், அடுத்துக் கெடுத்தல் என்னும் இரு வழிமுறைகளையும் பின்பற்றி, இவை பணத்தை வாரி இறைக்கின்றன!

பகைத்துக் கெடுக்கும் தளத்தில், ஏறத்தாழப் பதினெட்டு ஆண்டுகளாக ஒரு 'மாதமிருமுறை ஏடு' கோமாளிப் புனைவுடன் வெற்றிகரமாகச் செயல்பட்டுத் தன் நச்சு விதைகளை விதைத்து வருகிறது! அதன் உண்மை நோக்கத்தை அளந்தறியும் திறனற்றவர்களாய்ப் போன தமிழினைஞர் பலர்; தமிழினக் கேடர்களாய் உருமாறிப் போயிருக்கிறார்கள்!

உலகெங்கும் வாழும் ஏழு கோடித் தமிழருக்கும் விடிவெள்ளியாய்த் துலங்கும் ஈழவிடுதலையின் மீதும், விடுதலைப் போராளிகள்மீதும், சேற்றை வாரி இறைத்து, 'தூயவன்' வேடம் போடுகிறான் அந்தக் கோமாளி. அவரை உரிய முறையில் 'தோலுரிக்க' இங்குள்ள தமிழர் இயக்கங்கள் முன்வராததே 'நோவிலும் கொடிய நோவாகும்!'

தமிழர் நல எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக அந்தக் கோமாளி எங்கெங்கிருந்து காசு பெற்றாரோ, அங்கங்கிருந்தெல்லாம், அவர் பெற்றதைப் போல் பல மடங்கு காசுகளை வாரி வாரிப் பெற்றவர்கள் தமிழகத்தின் உயர் அதிகாரிகள் பலர்! தமிழர் நலத்திற்கும், ஈழ விடுதலைக்கும் ஆதரவாகச் செயல்பட்ட பலரும், பல இதழ்களும், பல அமைப்புகளும், இந்தக் கைக்கூலி உயர் அதிகாரிகளால் அச்சுறுத்தப்பட்டதும், தொல்லைகளுக்கு உட்படுத்தப் பட்டதும் வெளிவராத வரலாறுகள்! இந்தக் கைக்கூலிகளைக் கையகப்படுத்திக் கொண்டுதான், ஈழப்போரைக் கொச்சைப் படுத்தும் பணியை, அமெரிக்க, இசரேலிய, பிரிட்டானிய, பிரான்சிய, பாக்கித்தானிய ஆதரவுடன் சிங்களக் காடையன் செயவர்த்தனே தமிழ்மண்ணில் திறம்பட அரங்கேற்றுகிறான்!

இதற்கான செயல்திட்ட வரைவுகள், இசரேலிய அமெரிக்க உளவாளர்களால் திறம்பட வடிவமைக்கப் பட்டுள்ளன!

இந்தச் செயல் திட்டத்தின்படிதான் 'சில அடாவடி இயக்கங்கள்' உருவாக்கப் பட்டன! 'தமிழீழத்தின் குரல்' என்னும் பெயரில் (ஈழப் பொதுவுடைமைக் கட்சியின் குரலாக) சிங்கள அரசே ஒரு வானொலி நிலையத்தை நடத்துகிறது.

போராளிகள் தமக்குள் மோதிக் கொள்ளத் தொடங்கியதே இச் செயல் திட்டத்திற்குக் கிடைத்த வெற்றிதான்!

இத்திட்டத்தின்படி, சிங்கள அரசின் உளவாளிகள் (இவர்களும் தமிழர்தாம்) தமிழகமெங்கும் பெருத்த எண்ணிக்கையில் 1983-க்கு முன்பிருந்தே திரியத் தொடங்கியுள்ளார்கள்!

"நான் இந்த இயக்கத்தவன்—அந்த இயக்கத்தவன்" எனக் கூறிக்கொண்டு, பணம் திரட்டுவது, தமிழக மக்களிடம் முறைகேடாக நடப்பது, ஒழுக்கக் கேடாக நடந்து கொள்வது, திருடுவது, வழிப்பறி செய்வது முதலான தன்மைகளில் தமிழ் நாட்டுக்குள் இயங்குவது இவர்களின் திட்டமுறை ஆகும். இச் செயல்களால், தமிழ்நாட்டு மக்களுக்கு ஈழப் போராளிகள் மீதும், ஈழவிடுதலையின் மீதும் வெறுப்பு இயற்கையாக ஏற்படும் என்பது இவர்களின் எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்பு, ஓரளவு எண்ணியபடியே கைகூடியது என்பதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

(தொடரும்)

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு ஆப்பு வைத்து அறைகிறது போல், இப்பொழுது ஒரு செய்தி நடந்து வருகிறது. அதுதான் அண்மையில் தில்லித் தொலைக் காட்சியினின்று கிழமைதோறும் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கிற 'இராமாயணத் தொடர் நாடக' நிகழ்ச்சியாகும். இந்தி மொழியில் ஒளிபரப்பாகி வரும், இந் நாடகத்தில், பச்சையாக ஆரிய—திராவிட பூசல்கள் உரையாடல் வடிவில் பேசப் பெற்று வருவதை அனைவரும் கவனித்திருக்கலாம். இராமன் ஆரியர் தலைவன் என்றே புகழ்ந்து பேசப் பெறுகிறான். இந்நாடு ஆரிய நாடு-ஆரிய நிலம்-என்று வரலாற்றை மூடி மறைக்கின்றவாறு போலிக் கருத்துகள் வெளிப்படுத்தப் பெறுகின்றன.

ஆரியரை உயர்த்திக் கூறுகின்ற வகையில் ஆரிய—திராவிடப் பூசல்களைப் பேசுவது மட்டும் இவர்களுக்குத் தேவையாகிறது போலும்! இதன் தன்மையை இங்குள்ள இந்திராக் கட்சியிலுள்ள வரட்டுத் தலைவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டுகிறோம். திராவிடர்கள் இந் நாடகத்தில் தாழ்வாகவும் கூறப்படுவது; இவர்கள் கறிக்கு வேண்டுமானால் உறைக்காமல் இருக்கலாம். ஆனால், இங்குள்ள தமிழர்கள் எல்லோரும் இவர்களைப் போல் உணர்வற்று மானமற்று இருக்க முடியுமா? நிலை இப்படியே தொடருமானால், இந்தியாவில் இவ் விருபதாம் நூற்றாண்டு எல்லையிலேனும் மீண்டும் ஓர் இராமாயணக் கதை நடைபெற்றாலும் வியப்பதற்கில்லை! ஆனால் முடிவு வேறாக இருக்கும். 0

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் சாகும் வரை உண்ணாநோன்பு மேற்கொள்ளப் போவதாகவும், இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனவுக்கு நீண்ட வேண்டுகோள் மடல் ஒன்றைக் கடந்த 21—3—87 அன்று அனுப்பி வைத்திருக்கின்றனர்.

இதுபோலும் வேண்டுகோள் மடங்களைப் பல முறை அரசுக்கு அனுப்பி வைத்தும், அவர்கள் மேல் இரக்கப்படாத அரககத்தனமான அரசு, இது வரை எந்த வகை நடவடிக்கையும் எடுக்கவில்லை, இதற்கு முன்னும் இவ்வாறு பலமுறை இவர்கள் உண்ணா நோன்பு இருந்திருக்கின்றனர். ஆனாலும் பயனில்லை. இவர்களுள் சிலர் கடந்த 41 மாதங்களாகவே சிறையிலிருந்து கொடுமைப் படுத்தப் பட்டு வந்திருக்கின்றனர். இதுபற்றியும் அரசுக்குத் தெரியும்.

எனவே, இவ் வறிக்கையைக் கண்ணுறும் அன்பர்கள், பொது நிறுவனங்கள், அரசியல் தொண்டர்கள் அனைவரும் திரள் திரளாகக் கையெழுத்திட்டு ஒரு வேண்டுகோளைச் செயவர்த்தனேவுக்கு உடனே அவர்களை விடுவிப்புச் செய்யுமாறு அனுப்பிவைக்கும்படி வேண்டிக் கொள்கிறோம். 0

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு நன்கொடைப் பட்டியலில்

வரிசை எண்: 169-இல் வந்த வரவு உருபா 165-க்கு விளக்கம்.

1.	இரா. அருட்குவை,	நெய்வேலி	10-00
2.	மோ. இல. மோ. காசிம்,	,,	10-00
3.	தி. கு. வளவன்,	,,	5-00
4.	வி. சிவப்பிரகாசம், பத்மா நகைக்கடை,	,,	25-00
5.	சண்முகம்,	,,	5-00
6.	து. சென்னிவளவன்,	,,	10-00
7.	சு. திருவழகன்,	,,	10-00
8.	கோ. கண்ணன்,	,,	10-00
9.	தா. அன்புவாணன்,	,,	5-00
10.	மு. இராமதாசு, நகர்க்கூறு-2,	,,	10-00
11.	கரு. நடவரசன்,	,,	5-00
12.	கோ. தங்கவேலு,	,,	5-00
13.	இரா. கலைச் செல்வன்,	,,	5-00
14.	அருந்தமிழ் நம்பிமான்,	,,	5-00
15.	ச. சின்னத்துரை	,,	10-00
16.	மணி	,,	10-00
17.	பொன். தமிழ்மாறன்	,,	10-00
18.	சுப. திருமாறன்	,,	15-00

இலங்கையில் ஆறு ஆண்டுகளில் 15,217 தமிழர் உயிரிழந்தனர்!

1981 சனவரியில் இருந்து 1986 திசம்பர் வரை சிங்களப் படைத்துறையினரின் அத்துமீறல் நடவடிக்கைகளுக்கு 15,217 தமிழர் உயிரிழந்துள்ளனர்

யாழ் குடிமக்கள் குழுக்களின் 'இணைப்புக் குழு'ச் செயலாளர் மேற்கண்ட தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

1981-இல் இருந்து ஆண்டு வரிசையாக கருவிப் படையினரின் நடவடிக்கைகளினால் கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :

1981 - 846	1984 - 3,031
1982 - 1,380	1985 - 2,695
1983 - 3,678	1986 - 2,805

மொத்தம் - 14,705.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் உயிர்வளி(ஆக்சிசன்) தட்டுப்பட்டால் 400 பேர் உயிரிழந்தனர். 1684 இல் 209 பேரும், 1985-இல் 191 பேரும் இப்படி உயிரிழந்தனர். அதிர்ச்சி மற்றும் காரணங்களினால் 1985, 1986-ஆம் ஆண்டுகளில் 112 பேர் உயிரிழந்தனர். 1985-இல் 63 பேரும், 1886-இல் 49 பேரும் உயிரிறந்தனர் என்று அவ் வறிக்கை கூறுகிறது.

நன்றி. 'உறுமல்' 16-3-87

விடியல் என்பது வெற்றுக் க்னவே!

இது— கவர்ச்சி நடிகைகளின்
கலந்துரையாடல் அன்று.
உடல் உதட்டால்
உழைப்பை உதிர்க்கிற
உரவோர்கள் நடத்துகிற
உரையாடல்.

வயல் காட்டில்—
வெயர்வையை விதைத்துவிட்டு,
வறுமையை அறுவடை செய்கிற
உழவன் ஒருவன்.
நேர்த்தியாய் ஆடைகளை
நெய்து கொடுத்தாலும்,
ஓரங் கிழிந்த ஒற்றை
ஆடையையே,
உடுத்திக் கொண்டிருக்கும்
நெசவாளி ஒருவன்.
கடல் உப்பின்—
அடர்த்தியை அதிகப்படுத்துகிற
மீனவன் ஒருவன்.
எந்திரங்களை இயக்கியே,
நெஞ்சம் தீய்ந்து போன
ஆலைத் தொழிலாளி ஒருவன்.
வயல்தோழன், கடல்தோழனைக்,
கவலையோடு கேட்டான்:
'கடற் காற்று, கட்டு
மரங்களுக்கு,
இசைவு தராத—அந்தப்
புயல் நாள்களில்
என்ன செய்வீர்கள்?'
'உப்புக் காய்ச்சுவோம்—
கடலிலா?—இல்லை, கண்களில்!'
நெசவாளி ஆலைச் சங்கின்
அடிமையைக் கேட்டான்—
'எந்திரத்திற் காவது—உங்கள்
'உள்ள உருக்கம் புரிகிறதா?'
'எங்கள் முதலாளி மட்டுமன்றி
எந்திரமும் கூட
வாய்ப்புக் கிடைத்தால்
கையைக் கடித்துக்
குருதியைக் குடிக்கும்.
முடிந்தால் உடலையே மென்று
சக்கையாய்த் துப்பும்'
நீங்கள் எப்படி?'
'என் ஆடைக் குழந்தைகள்
அப்படி ஒன்றும்
நன்றி கெட்டவர ல்லர்.
வயிற்று அடுப்பில்
பசி நெருப்புப்
பற்றி எரிகையில்
அடி வயிற்றுக்கு
ஆறுதல் சொல்வது
ஈரத் துணிதான்.'
வயல் தோழனுக்கு
வருத்தம் என்னவோ?'
'நான் வயல்காட்டில்
வளர்த்த நெல்மணி,
அறுவடைத் திருமணம்
ஆகி முடிந்த பின்,
எங்கள் குடிசைப் பானைகளை
ஏமாற்றி விட்டு—சிலரின்
கிடங்கிலல் லவோ,
முடங்கிக் கிடக்கிறது.'

பல குரல்களில் பேசியவர்கள்—
ஒரே குரலில்
உரத்துச் சொன்னார்கள்—
'கிழக்கைச் சூரியன்
கிழிக்காத வரையில்—
செம்பருதி சிவக்காத
வரையில்—
விடியல் என்பது வெற்று கனவே'

• மதுக்கூர் இராமலிங்கம்.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 84 TN/MS (C) 657

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!
1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 3

தமிழரின் அனைத்து முயற்சிகளையும், தங்களுக்கென ஒரு தனிநாட்டை அமைத்துக் கொள்வதிலேயே செலுத்தல் வேண்டும்.

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.